[2015 செப்டம்பர் 28

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கிட்டத்தட்ட 25—க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறேன். எல்லாமும் மிகுந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒன்றே ஒன்றுதான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், அவற்றைப் பற்றிச் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இந்தப் பேரவை ஆரம்பித்த நாளிலிருந்து, இன்றைக்கு பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்த மாதிரி, தினமும் ஒரு கவன ஈர்ப்பு இங்கே முறையாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த மாதிரி வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், காலை 9—55, 9—58 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்தாலும்கூட, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களிடத்தில் விவரங்கள் கேட்டு, இன்றைக்கு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, தகவல் கோரல் என்ற முறையில் விவரங்களைத் திரட்டி, மாண்புமிகு அமைச்சர்களும் இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். முறையாக வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அத்தனை கட்சிக்காரர்கள் கொடுத்த கவன ஈர்ப்புகளும் தேவையான அளவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் தகவல்களைப் பெற்றதற்குப் பின்னர், வேண்டுமென்றே வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்பதற்காக, அவைக்கு வந்து வெளியேறுவது என்பது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் உட்காருங்கள்.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)